
## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!




## புகழ்பெற்ற மலையேற்ற வீரர் நிர்மல் உட்பட 6 பேர் பனிச்சரிவில் உயிரிழப்பு!

புதுடெல்லி, ஆக. 4 –

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் சீனா எல்லைப் பகுதியில் உள்ள காரகோரம் மலைத்தொடரில், உலகின் 12வது மிக உயர்ந்த சிகரமான 'பிராட் பீக்' அமைந்துள்ளது.

புகழ்பெற்ற நேபாள வம்சாவளி மலையேற்ற வீரரான நிர்மல் 'நிம்ஸ்' புர்ஜா உள்ளிட்ட 6 பேர் அடங்கிய குழுவினர் மலையேற்றத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், அவர்கள் சென்று கொண்டிருந்த மேற்குப் பகுதி பாதையில், சுமார் 21,600 அடி முதல் 21,850 அடி உயரத்தில் கடந்த வெள்ளிக்கிழமையன்று திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கிய 6 பேரும் உயிரிழந்துவிட்டனர். இதை அவரது 'எலைட் எக்ஸ்பெட்' நிறுவனம் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அதிகாரப்பூர்வமாக உறுதி செய்துள்ளது.

பிரிட்டனின் 'குர்க்கா' மற்றும் 'ஸ்பெஷல் போட் சர்வீஸ்' (எஸ்பிஎஸ்) படைகளில் பணியாற்றிய முன்னாள் வீரரான நிர்மல் புர்ஜா, முழு நேர மலையேற்ற வீரரான பிறகு பல உலக சாதனைகளைப் படைத்துள்ளார்.

### காவிரிப் பிரச்சினை: முதலமைச்சரின் உறக்கம் கலைவது எப்போது?

## தமிழ்நாட்டின் அனைத்து எதிர்க்கட்சிகளையும் கொச்சைப்படுத்துவதா?

### "கட்சித் தாவல் வல்லுநர்" அமைச்சர் நிர்மல் குமாருக்கு முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி கடும் கண்டனம்!

சென்னை, ஆக. 4 -

**"தமிழ்நாட்டின் அனைத்து எதிர்க்கட்சிகளையும் கொச்சைப்படுத்திய 'கட்சித் தாவல் வல்லுநர்' அமைச்சர் நிர்மல் குமாருக்கு முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில், காவிரி நீரை உடனடியாகத் தமிழ்நாட்டுக்கு விடுவிக்க உச்சநீதிமன்றத்தில் தி.மு.க சார்பில் அவசர மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

கர்நாடக முதலமைச்சர் டி.கே. சிவகுமார் தினமும் உயர்நிலைக் கூட்டங்களைக் கூட்டி வருகிறார், டெல்லி சென்று ஒன்றிய அமைச்சர்களைச் சந்திக்கிறார், முன்னாள் முதலமைச்சர்கள், கர்நாடக நாடாளுமன்ற உறுப்பி னர்கள் உள்ளிட்டோர் அடங்கிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தையும் (ஆகஸ்ட் 2) அறிவித்திருக்கிறார்.

ஆனால், தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினையில் தூங்குமூஞ்சி த.வெ.க. அரசு மெத்தனத்தோடும் மிதப்போடும் செயல்பட்டு வருகிறது. 'கட்சித்தாவல் வல்லுநர்' நிர்மல் குமார் ஒருபடி மேலே சென்று த.வெ.க. அரசுக்கு ஆதரவு அளித்து வரும் கட்சிகள் உட்பட தமிழ்நாட்டின் அனைத்து எதிர்க்கட்சிகளும் கர்நாடகத்துக்கு ஆதரவாகச் செயல்படுவது போல கொச்சைப்படுத்திப் பேசியுள்ளார். காவிரி நடுவர் மன்றம் கண்ட தலைவர் கலைஞர் அவர்கள் குறித்தும் அவதூறாகப் பேசியிருக்கிறார்.

**ஊடகங்களைச் சந்தித்தால் இமேஜ் சரிந்துவிடுமோ!**

தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கும் ஜோசப் விஜய் அவர்களோ, நீர்வளத்துறைக்கு அமைச்சரான ஆனந்த் அவர்களோ மேகதாது அணை தொடர்பாக இதுவரை வெளிப்படையாக எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் குறித்த நிர்மல் குமாரின் கருத்தையும், அனைத்துக் கட்சிக் கூட்டம் தேவையில்லை எனும் அவரது நிலைப்பாட்டை யும் அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனரா என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

ஊடகங்களைச் சந்தித்தால் தனது இமேஜ் சரிந்துவிடும் என்று தமிழ்நாடு முதல மைச்சர் அஞ்சுவதை நாங்கள் புரிந்து கொள்கிறோம். ஆனால், காவிரி போன்ற முக்கியப் பிரச்சினையில் முதலமைச்சர் தனது நிலை ப்பாட்டை மக்களுக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அவருக்கு இருக்கிறது. மாநில நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் எல்லாவற்றிலும் வாய்மூடியே இருப்பது தமிழ்நாட்டில் பலவீனமான ஆட்சி இருப்பதான தோற்றத்தை ஏற்படுத்திவிடும். அண்டை மாநிலங்கள் மட்டுமல்ல, இங்குள்ள ஆளுநரும் நமது மாநில அரசைக் கிள்ளுக் கீரையாக எண்ணுவதற்கே இது வழிவகுக்கும்.

மாநிலத்தின் உயிர்ப் பிரச்சினைகளில் கூட யாரையும் கலந்தாலோசிக்காமல் முதலமைச்சர் உறக்கத்தில் இருப்பதும், வார இறுதி நாட்களில் Complete Rest Modeக்குச் சென்று விடுவதும் காவிரி விவசாயிகளைக் கடும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. நமது முதலமைச்சரையும் அரசையும் நம்பி எந்தப் பிரயோஜனமும் இல்லை, மழை பெய்து கர்நாடகம் தானாகத் தண்ணீர் திறந்து விட்டால்தான் உண்டு எனும் அளவுக்கு அவநம்பிக்கையில் அவர்களைத் த.வெ.க. அரசு தள்ளுவது கடும் கண்டனத்துக்குரியது.

**உறக்கத்தில் முதலமைச்சர்!**

உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி, உச்சநீதி மன்றத்தில் தமிழ்நாட்டின் காவிரி உரிமையை நிலைநாட்டும் வகையில் தமிழ்நாடு அரசு தீவிரமாகச் செயல்பட வேண்டும். தான்தோன்றித்தனமாகப் பேசியுள்ள அமைச்சர் நிர்மல் குமார் தனது செயலுக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும்.

காவிரிப் பிரச்சினையில் அரசுடன் ஒத்துழைக்கவும் ஆலோசனைகள் கூறவும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தயாராகவே இருக்கின்றன. மாநில நலன் சார்ந்த விவகாரங்களில் குறுகிய மனப்பான்மையுடன் செயல்படுவதைத் த.வெ.க. அரசு இனியேனும் தவிர்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்:

## வேலூர் வடக்கு மாவட்டம் முழுவதும் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி!

### மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

*வேலூர், ஆக. 4 -*

*வேலூர் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் 01.08.2026 ஆக்ஸிலியம் கல்லூரி அருகில் எஸ்.ஏ.மகாலில் வேலூர் மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர், டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கீழ்க்கண்ட தீர்மானங்கள் குறித்து வரவேற்று பேசினார்.*

*மேலும், இச்செயற்குழுக் கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்கழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.*

*இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:*

*கர்நாடகாவின் மேகதாது அணைத் திட்டத்திற்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.*

*★ 2018 காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை முழுமையாக அமல்படுத்த மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.*

*தமிழக அரசு அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி, தமிழகத்தின் நீர்வள உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் ஒருமனதாக நிறை வேற்றப்படுகிறது.*

*தமிழ்நாட்டில் நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.*

*★ நீட் காரணமாக அரசு பள்ளி மற்றும் கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்படுவதால், நீட் விலக்கு வழங்க மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இச்செயற்குழு வலியுறுத்துகிறது.*

*கழகத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் கிளை கழகங்கள் தோறும் அவரது திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்துவதென இச்செயற்குழுவில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.*

*வேலூர் வடக்கு மாவட்டம் புதியதாக உருவாக்கப் பட்டுள்ளது. இதற்கு சார்பு அணிகளுக்கான சிறப்பாக பணியாற்றக் கூடிய நிர்வாகிகளை மாவட்ட, ஒன்றிய, பகுதி, வட்ட, பேரூர் கழக செயலாளர்கள் விரைவாக தேர்வு செய்து, ஒரு வாரத்திற்குள் மாவட்டக் கழகத்திடம் பட்டியலை ஒப்படைக்குமாறு இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.*

*இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

### மக்கள் நலத் திட்டங்களுக்கு நிதிப் பற்றாக்குறை!

## முதலமைச்சர் அலுவலக இடம் மாற்றத்திற்கு 11 கோடி ரூபாய் ஒதுக்கீடு!

### பொதுமக்கள் ஆவேசம்!

சென்னை, ஆக.4–

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள தலைமைச் செயலகத்தில் தமிழக முதல்வர் அலுவலகம் சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகிறது. தற்போது, முதலமைச்சரின் அலுவலகம் நாமக்கல் கவிஞர் மாளிகைக்கு ஜோசியரின் ஆலோசனைப்படி இடமாற்றம் செய்யப்பட உள்ளது. இதற்கான பணிகள் அந்த மாளிகை யின் பத்தாவது தளத்தில் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளை 3 மாதங்களுக்குள் முடிக்க திட்ட மிடப்பட்டுள் ளது.

இந்நிலையில், முதல்வர் அலுவலகத்தை மாற்றி அமைப்பதற்காக 11 கோடி ரூபாயை தமிழக அரசு ஒதுக்கி உள்ளது. அடுத்த கட்டமாக, இந்த பணி களை செய்வதற்கான ஒப்பந்ததாரர்களைத் தேர்வு செய்து கட்டுமான வேலைகள் தொடங்கப்படும் எனவும் கூறப்படுகிறது.

இதுதவிர, தலைமைச் செயலகத்தில் உள்ள அமைச்சர்கள் அறைகளைப் புதுப்பிக்கும் பணிகளும் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் வாக்குறுதி களை நிறைவேற்ற நிதி இல்லை என த.வெ.க. அரசு கைவிரித்து வரும் நிலையில், முதலமைச்சர் அலுவலக இடமாற்றத்திற்கு மட்டும் 11 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

## மாணவர்களின் எழுச்சி நேற்று! இன்று! நாளை!

## கார்ப்பரேட்டுகளின் கைகளில் கடைத் தேங்காயாகிவிட்ட "நீட்"!

CJP (காக்ரோச் ஜனதா கட்சி) சார்ந்த மாணவர்களும் இளைஞர்களும் "நீட்" தேர்வு வினாத்தாள் கசிவு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மேலும் இந்த வேண்டாத விளைவுகளுக்குக் காரணமான ஒன்றிய அரசு கல்வித்துறை அமைச்சர் "தர்மேந்திர பிரதான்" பொறுப்பேற்று ராஜினாமா செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் வலியுறுத்தி டெல்லி "ஜந்தர் மந்தர்" பகுதியில் தொடர்ந்து நடைபெற்று முடிந்துள்ள மாணவர்களின் வீறுகொண்ட தன்னெழுச்சியான போராட்டத்தை அடக்கி ஒடுக்க ஒன்றிய அரசு கையாண்ட முறையானது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

காக்ரோச் ஜனதா கட்சி (CJP) மாணவர்கள் நடத்தி வரும் "நீட்" தேர்வு முறை கேடுகளுக்கு எதிரான போராட்டம் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை ஒன்றிய அரசு உரிய உளவுத்துறையின் மூலமாக ஆய்ந்தறிந்து, அதற்கான முன்னேற்பாடுகளை முன்கூட்டியே செய்திருக்க வேண்டும். "நீட்" எதிர்ப்புப் போராட்டத்தில் தொடர்புடைய மாணவர் அமைப்பின் கோரிக்கைகளை பரிசீலனை செய்து அதற்கான தீர்வுகளை முன்கூட்டியே அந்த அமைப்பின் இருபால் மாணவர்கள் பிரதிநிதிகள் பேசி கலந்தாலோசித்து, உரிய முடிவுகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், அதற்கு மாறாக ஒன்றிய அரசு எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் மாணவர்களின் மிகப்பெரிய தன்னெழுச்சியான உணர்ச்சிப்பூர்வமான அடர்த்தியான தொடர் போராட்டத்தை காவல்துறையின் அடக்குமுறைகள் மூலம் கட்டுக்குள் கொண்டுவர பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது, எந்த வகையிலும் அமைதியை ஏற்படுத்தவில்லை என்பதோடு அனைத்து தரப்பினரிடமிருந்து எதிர்வினையை ஏற்படுத்தியது ஒன்றிய அரசின் இந்த விபரீதமான காவல்துறையின் அடக்குமுறைகள் காரணமாக மாணவர்களின் போராட்டம் நாளுக்குநாள் அதிகரித்து தீவிரமானதே தவிர, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பத்திரிக்கை மற்றும் காட்சி ஊடகங்கள் மூலம் நாடும், நாமும் தெளிவாகவே பார்க்க முடிந்தது.

**பொன். முத்துராமலிங்கம்**
*முன்னாள் அமைச்சர்*
*கழக உயர்நிலை*
*செயல் திட்டக்குழு*
*உறுப்பினர்*



மாணவர்களின் இந்தப் போராட்டத்தின் வலிமையான கோரிக்கை இருபால் மாணவர்கள் மத்தியில் தானாகவே உருவான பேரெழுச்சியின் அடிப்படை உண்மையை ஒன்றிய அரசு புரிந்து கொள்ள மறுப்பது நியாயமற்றதும், இயற்கை நீதிக்கு மாறானதுமாகும். இந்தப் போராட்டத்தின் மூலம் மாணவர்கள் முன்வைக்கும் கோரிக்கை என்பது முற்றிலும் மாணவர்களின் எதிர்கால நலன் மற்றும் உரிமை சார்ந்தவை என்பதை இந்தக் கட்டுரையில் படிப்பவர்கள் நன்கு புரிந்து கொள்ள முடியும் என்பதற்காக அவர்களின் அந்த கோரிக்கைகள் கீழ்வருமாறு பட்டியலிடுகிறேன்.

1. "நீட்" வினாத்தாள்கள் தேர்வு தேதிக்கு முன்கூட்டியே கசிந்தது எப்படி? என்பதற்கான நியாயமான விளக்கத்தை போராடிய மாணவர்கள் கேட்டார்கள்.

2. "நீட்" வினாத்தாள்கள் முன்கூட்டியே கசிந்து வெளிவந்தமையால், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குரிய இழப்பீடு வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கிறார்கள்.

3. "நீட்" தேர்வு வினாத்தாள் பற்றிய இந்த தவறுகளுக்கெல்லாம் தார்மீகப் பொறுப்பேற்று ஒன்றிய அரசின் கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற வலுவான கோரிக்கையை எழுப்பினார்கள்.

மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக மத்திய அரசின் காவல்துறை கட்டுப்பாட்டைமீறி, தலைநகர் டெல்லியில் பெரிதாக சட்டம்ஒழுங்கு பிரச்சனையில் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டதால், விழித்துக் கொண்ட ஒன்றிய அரசின் காக்ரோச் ஜனதா கட்சி மாணவர்களின் பிரதிநிதிகளை பேச்சு வார்த்தைக்கு அழைத்து ஒரு வழியாக ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்வதை ஒப்புக்கொண்டு ராஜினாமா செய்ததால் தொடர்ந்து உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்த சோனம் வாங்சுக் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார் என்றாலும் போராடிய மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை நலன்களை ஒன்றிய அரசு உணர மறுத்து ஆட்சிஅதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி மாணவர்களின் தன்னெழுச்சியான போராட்டத்தை தடுக்க நினைத்தது தவறானது என்பதே இந்திய ஒன்றிய மக்களின் ஒருமித்த கருத்தாகும்.

ஏனெனில், 21 ஆம் நூற்றாண்டு இளைஞர்களின் சிந்தனையெல்லாம் அனைவருக்கும் சமமான வாய்ப்பு என்ற சமதர்மக் கோட்பாட்டை நோக்கியே நகர்கிறது. இளைஞர்களின் இத்தகைய சிந்தனைகளுக்கு ஆட்சிஅதிகாரத்திலுள்ள ஆதிக்கவர்க்கம் தடைசெய்யுமாயின், அதை தகர்ப்பதற்கு தடந்தோள் தட்டுவதே தற்போதைய மாணவர்களின் மனநிலையாக உள்ளது. அதற்கான பரிசோதனை களம்தான் தலைநகர் டெல்லியில் ஜந்தர் மந்தரில் நடைபெற்ற "நீட்" எதிர்ப்பு மாணவர்கள் போராட்டமாகும்.

மேலும், நடந்துமுடிந்த அந்தப் போராட்டத்தின் போது போராடிய மாணவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப்பெற வேண்டுமென்று உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் குற்றப்பின்னணி உள்ளவர்களைத்தவிர, மற்ற மாணவர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்ற தீர்ப்பு வந்திருப்பது போராடிய மாணவர்களுக்கு கிடைத்த வெற்றியாகும். மேலும், "நீட்" தேர்வு குறித்த மாணவர்கள் போராட்டம் இத்துடன் இப்போது முடித்து வைக்கப்பட்டாலும், எதிர்காலத்தில் இத்தகையப் போராட்டம் உருவாகாது என அறுதியிட்டு உறுதியாக கூறவியலாது.

"நீட் வினாத்தாள் கசிவு" என்ற குற்றச்செயல் யாருக்காக, யாரால் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகிறது என்பதை ஒன்றிய அரசும் இந்திய ஒன்றியத்தில் வாழும் சாதாரண சாமானிய அடித்தட்டு மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். ஏனெனில், "நீட் வினாத்தாள் கசிவு" என்ற குற்றச்செயல்களை சாதாரண சாமானிய மக்களால் செய்துவிட முடியாது. வசதிவாய்ப்புள்ளவர்களாகத்தான் இருக்க முடியும் என்பதே நிதர்சனமாகும்.

அவர்களது பிள்ளைகளை மருத்துவராக்குவதற்கு எத்தகைய முறைகேடான செயல்களைச் செய்வதற்கும், முயற்சி மேற்கொள்வதற்கும் தயாராக பெருந்தொகை செலவு செய்வதற்கும் தயாராக இருப்பார்கள் என்பதற்கு கடந்தகால "நீட்" தேர்வு ஆள்மாறாட்ட வழக்குகளே ஆதாரங்களாகும். இன்னொரு புறம் சாதாரண சாமானிய கடைநிலை மக்களால் தங்கள் பிள்ளைகளுக்கு இத்தகைய தவறான முயற்சிகளை மருத்துவராக்க வேண்டுமென்ற வாய்ப்பு எட்டாக்கனி ஆகிவிடுவதால்தான் அடித்தட்டு மக்களின் குழந்தைகள் மாணவர்கள் "அனிதா" போன்ற விரும்பத்தகாத முடிவுகளை எடுக்கிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

சிலநேரங்களில், அதீத அறிவாற்றல் உள்ள மாணவர்களில் சிலர், விதிவிலக்காக "நீட்" தேர்வு தடைகளையும் மீறி, வெற்றி பெற்றிருப்பது பொதுவிதியாகாது. உலகை உள்ளங்கையில் உருட்டி விளையாடுகின்ற இன்றைய அறிவியல் வளர்ச்சியின் காரணமாக கார்ப்பரேட்டுகள் எனும் பெரும் வணிக நிறுவனங்கள் நினைத்தால், தீர்மானித்தால், திட்டமிட்டு "நீட் வினாத்தாள் கசிவினை" வேறுவேறு வடிவத்தில் அரங்கேற்ற முடியும். இதை இன்றைய கார்ப்பரேட்டுகளின் அகராதியில் "முடியாது" என்ற ஒரு வார்த்தை இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. (The word "impossibility" is not in the dictionary of corporates)

இதுமட்டுமல்ல, செயற்கை நுண்ணறிவு செயல்பாடுகளின் மூலம் (AI) வியத்தகு சாதனைகள் அரிதிலும் அரிதாக அன்றாடம் அரங்கேறிக் கொண்டிருக்கின்ற நவீன நன்கு வளர்ச்சியடைந்த இன்றைய அறிவியல் யுகத்தில் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்படும் ஒரு சட்டத்தின் மூலம் "நீட்" வினாத்தாள் கசிவினைக் கட்டுப்படுத்த முடியும் என்பது "காட்டாற்று வெள்ளத்தை கைகளால் கட்டுப்படுத்த முடியும்" என்ற கற்பனைக் கதையாகும்.

எனவே, "நீட்" வினாத்தாள் கசிவிற்கு 10 லட்சம் அபதாரம் மற்றும் 10 ஆண்டுகள் சிறைதண்டனை என்று ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள புதிய சட்டம் மட்டுமே நீட் தேர்வு குழப்பங்களுக்கு நிரந்தர தீர்வாகாது. அப்படியானால் இந்த கட்டுரையைப் படிப்பவர்களுக்கு என்னதான் தீர்வு என்று கேட்பீர்களேயானால், அதற்கான விடைதான் தி.மு.க தலைவரும் தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வருமான "திராவிட மாடல்" ஆட்சியின் நாயகன் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தனது ஆட்சிக்காலத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி எஸ்.ஏ.ராஜன் தலைமை யில் அமைத்த குழு ஆய்வுசெய்து அளித்த அறிக்கையாகும். அந்த அறிக்கையின் "நீட்" தேர்வு குளறுபடிகளுக்கு "நீட்" தேர்வு முறையை ரத்துசெய்வதுதான் ஒரே வழியாகும் என்பதை தெளிவாகவும், திட்டவட்டமாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆம்! முந்தைய "திராவிட மாடல்" அரசு நியமித்த நீதிபதி எஸ்.ஏ.ராஜன் தலைமையிலான குழு அளித்த அந்த தேர்வுதான் "நீட்" தேர்வு முறைகேடுக்கான உண்மையான தீர்வாகும். வேறு எந்தத் தேர்வும் "நீட்" பிரச்சனைக்கு நிரந்தர முடிவாகாது. மேலும், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இன்றைய ஒன்றிய அரசு ஒன்றை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியா என்பது "வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடாகும்". பல்வேறு மொழி, பண்பாடு, கலாச்சாரத்தை கொண்டிருக்கிற வெவ்வேறு வாழ்வியலின் நிலைப்பாட்டை பின்பற்றுகிற பரந்துபட்ட இந்திய ஒன்றியத்தில் பல மாநில அரசுகள் உள்ளபோது இந்திய ஒன்றிய முழுமைக்குமான மருத்துவ கல்விக்கு "நீட்" தேர்வு நடத்துவது என்பது "ஒரே நாடு ஒரே தேர்தல்" என்ற நடைமுறைக்கு சாத்தியமில்லா தத்துவம் போன்றதாகும்.

எனவே, "வேற்றுமையில் ஒற்றுமை" (Unity of Diversity) என்ற நடைமுறையின் கீழ் வெவ்வேறு மாநில மக்களின் உரிமை காப்பாற்றப்பட வேண்டுமென்றால், கல்வி நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் "நீட்" தேர்வை அடியோடு ஒழிப்பதுதான் இந்திய ஒருமைப்பாட்டுக்கு உகந்ததாகும். இல்லையேல், இந்திய தேசிய ஒற்றுமைக்கு (National Integrative) எதிர்காலத்தில் விபரீத விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கான எச்சரிக்கை மணிதான் இன்றைய "டெல்லி ஜந்தர் மந்தர்" பகுதிகளின் போராட்டமாகும்!!